DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

DVC.No.10/2023

Deposition of witness:RW1

| | | | |
|---|---|---|---|
| Name | ரவி | Taluk | |
| Father's Name | ராமானுஜம் | Village | |
| Age | 57 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **16.04.2026.** | | | |

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

**1.** திருமணத்திற்கு முன்பும் நான் பண்ருட்டியில் தான் வசித்தேன். திருமணத்திற்கு பின்பு நான் பண்ருட்டிக்கு வந்து செல்வேன். திருமணத்திற்கு முன்பு நான் கோரி இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற தனியார் நிறுவனத்தில், மேற்பார்வையாளராக சென்னையில் பணிபுரிந்து வந்தேன். எனது வேலை நிமித்தமாக எங்கள் நிறுவனத்தின் ஒப்பந்த நிறுவனங்களுக்கும் சென்று வேலை செய்து வந்தேன். அப்போது எனது மாத வருமானம் ரூ.3100/– ஆகும். மேற்படி மாத வருமானம் தவிர்த்து பயணபடிகளும் எனக்கு கிடைக்கும். திருமணத்திற்கு பிறகு எனது மனைவி அவர்கள் குடும்பத்தின் மீது கொண்ட பாசத்தினால், என்னை விட்டு பிரிந்து சென்றதாக வழக்கிற்காக பொய்யாக எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், அவர் எனது குடும்பத்தாருடன் சேர்ந்து வாழ விருப்பமில்லாமல் அவ்வாறு சென்றுவிட்டார். எனது மனைவி எனது பெற்றோரை சரிவர கவனிக்கவில்லை என்றும், எனது மனைவியின் தொந்தரவினால் தான், நான் தனிக்குடித்தனம் சென்றேன் என்றும், எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. எனது மனைவி பிரிந்துவிட்டதாக சொல்லப்படும் காலத்திற்கு பிறகும் கூட, எனது தந்தையும், எனது உடன் பிறந்த சகோதரியும், அவரது மகனும் எனது மனைவியின் உடன் பிறந்த சகோதரரின் திருமணத்திற்கு சென்று ஆசிர்வதித்துள்ளனர் என்றால், சரிதான், ஏனெனில் அப்போது வரை எங்களுக்குள் நிரந்தர பிரிவு ஏற்படும் என்று நாங்கள் நினைக்கவில்லை, சேர்ந்து வாழும் முயற்சிகளிலும், பேச்சு வார்த்தைகளிலும் இரு குடும்பங்களும் இருந்ததனால், எனது தந்தையும், எனது சகோதரியும் மேற்படி திருமணத்திற்கு சென்றனர். மேற்படி சமாதான முயற்சி, பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தாலும் என்னைத்தவிர எங்கள் குடும்பத்தில் மற்றவர்கள் தான் எங்கள் இருவரையும் சேர்த்து வைக்கும் முயற்சியில் இருந்தனர் என்றாலும், எனக்கு மட்டும் அதில் விருப்பமில்லை என்றாலும் சரியல்ல, நான் சொன்னதன் அடிப்படையில் தான், மேற்படி எனது குடும்பத்தினர் சமாதான முயற்சியில் இறங்கினர். மேற்படி கால கட்டத்தில் எனது மனைவி என்னுடன் திருநெல்வேலிக்கு வந்து என்னுடன் குடித்தனம் செய்வதற்கு தயாராக

இருப்பதாக இசைவு தெரிவித்தும், நான் தான் அவரை அழைத்துச் செல்ல மறுத்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. நான், எனது முதன்மை பிரமாண வாக்குமூலத்தில் 12 சவரன் நகையும், வீட்டு உபயோக பொருட்களும் மட்டுமே எங்களது திருமணத்தின்போது, எனது மனைவிக்கு அவரது வீட்டிலிருந்து போட்டனர் என்றும், அதனை நான் திருப்பி கொடுக்க தயாராக இருந்தேன் என்றும், ஆனால் எனது மனைவி தரப்பில் தான் வாங்கதவறிவிட்டனர் என்றும் குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான், நான் மேற்படி 12 சவரனில் என் வசம் இருந்த 75 கிராம் நகையும், வெள்ளிப் பொருட்களையும் எனது மனைவி தரப்பினரிடம் ஒப்படைத்துவிட்டேன். உண்மையிலேயே, எனது மனைவி வீட்டினர் எங்கள் திருமணத்தின்போது, 36.5 சவரன்கள் எங்கள் இருவருக்கும் சேர்த்து, போட்டனர் என்றாலும், நான் 12 சவரன்கள் தான் போட்டனர் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 75 கிராம் என்பது 9 சவரன் 3 கிராம்கள் நகை என்றால் சரிதான்.

3. நான் சார்பு நீதிமன்றத்தில், தாக்கல் செய்துள்ள எதிருரையில் எனது மனைவியின் நகை எதுவுமே என்னிடம் இல்லை என்றும், அனைத்தையும் அவர் எடுத்துச்சென்றுவிட்டார் என்றும், அதன் பிறகு மேற்படி சார்பு நீதிமன்றத்தில் சீர்வரிசை பொருட்களை திரும்ப ஒப்படைக்குமாறு மனு போட்ட பின்புதான் 12 சவரன் நகை மட்டும் என்னிடம் உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி மனுவானது இவ்வழக்கு மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்பாகி அதன் மீது, நான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தேன் என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீட்டின் போதும், எனது தரப்பு வழக்கறிஞர் எனது மனைவியின் நகை எதுவுமே என்னிடம் இல்லை என்றும், அனைத்தையும் அவர் எடுத்துச்சென்றுவிட்டார் என்றும் வாதிட்டார் என்றாலும், ஆனால் அந்த மேல்முறையீட்டில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் நகையை மனுதாரரிடம் ஒப்படைத்தவிட வேண்டும் என்று தீர்ப்பளித்தது என்றாலும், சரியல்ல. அதன் பிறகு தான் நான் 75 கிராம் நகைகளை மனுதாரரிடம் ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல.

4. 9 1/4 சவரன் நகைகள் போக மீதி நகைகள் என்னிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல, நான் என்னிடம் இருந்த நகைகளை கொடுத்துவிட்டேன். நீரிழிவு நோயும், இரத்தக்கொதிப்பும் எனக்கு இருந்ததாகவும், அதனை எனது மனைவி சொல்லிக்காட்டியதால் எனக்கு மனஉளைச்சல் ஏற்பட்டதாகவும் எனது முதல் விசாரணையில் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீரிழிவு நோயும், இரத்தக்கொதிப்பும் எனக்கு இருந்தது எனக்கு திருமணத்தின்போது தெரியுமா என்றால் தெரியாது. எங்களுக்கு குழந்தைபேறு இல்லாததற்கு மருத்துவ சிகிச்சை நான் எடுத்துக்கொண்டேனா என்றால், விழுப்புரத்தில் மருத்துவர் பூமாதுவிடமும், புதுச்சேரியில் தாயாரம்மாள் மருத்துவமனை மற்றும் பிம்ஸ் மருத்துவமனையிலும், திருவண்ணாமலையில் சித்தவைத்தியரிடமும், சென்னையில் எஸ்தர் ஆப்ரகாம் மருத்துவர்களிடமும்,

இன்னும் பல மருத்துவர்களிடமும் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். மேற்படி மருத்துவமனைகளில் நான் சிகிச்சை எடுத்துக்கொண்டேனா, எனது மனைவி சிகிச்சை எடுத்துக்கொண்டாரா என்றால் இருவரும் சிகிச்சை எடுத்துக்கொண்டோம். மேற்படி சிகிச்சைகள் எதையும் நான் முழுமையாக மேற்கொள்ளாமல் அறைகுறையாக பாதியிலேயே விட்டுவிடுவதை வழக்கமாக கொண்டிருந்தேன் என்றாலும், அதன் காரணமாகவே எங்கள் இருவருக்கும் இடையே பிரிவினை அதிகமானது என்றாலும் சரியல்ல. மேற்படி சிகிச்சைகள் தொடர்பான மருத்துவ ஆவணங்கள் என்னிடம் உள்ளனவா என்றால், அவற்றையெல்லாம் எனது மனைவி எடுத்துச் சென்றுவிட்டார்.

5. மேத்தா மருத்துவமனையில், எனது விந்தணுக்களை எனது மனைவியின் கற்பபையில் செலுத்தும் சிகிச்சை முறை மேற்கொள்ளப்பட்டதா என்றால் இல்லை. உண்மையிலேயே மேத்தா மருத்துவமனையில், எனது விந்தணுக்களை எனது மனைவியின் கற்பபையில் செலுத்தும் சிகிச்சைக்காக நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு, எனது விந்தணுக்கள் கேட்கப்பட்ட நேரத்தில், அவற்றை கொடுக்காமல் நான் மேற்படி மருத்துவமனையிலிருந்து சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பி சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. நான், ஆரம்பத்தில் இருந்தே எவ்வித சிகிச்சைக்கும் ஒத்துழைப்பு கொடுக்காததால் தான், எந்த சிகிச்சையும் வெற்றியடையவில்லை என்றாலும், அவ்வாறு சிகிச்சைகளுக்கு நான் ஒத்துழைப்பு கொடுத்திருக்கும் பட்சத்தில் எங்களுக்கு இந்நேரம் குழந்தை பாக்கியம் கிடைத்திருக்கும் என்றால் சரியல்ல.

6. எனது மனைவிக்கு கருக்குழாய் அடைப்பு இருந்ததனால், கருத்தறிப்பு தாமதமானதாக எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் வழக்கிற்காக பொய்யாக செல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஒரு பெண் என்ற முறையில் கருத்தறிப்பதற்காக என் மனைவி அனைத்து சிகிச்சைக்கும் பிரயத்தனப்பட்டு, உடன்பட்டார் என்றாலும், நான் அவர் சிகிச்சைகளுக்கு ஒத்துழைக்க மறுத்துவிட்டார் என்று எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் வழக்கிற்காக பொய்யாக செல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி சிகிச்சைகளுக்காக அன்றைய காலக்கட்டத்தில் ரூ.4,00,000/- திரட்டுவது எனக்கு சாத்தியமல்ல என்றாலும், மேற்படி சிகிச்சைகளுக்கு எனது மனைவி தான் மேற்படி தொகையை அவரது குடும்பத்தின் வாயிலாக திரட்டி சிகிச்சைக்கு செலவு செய்தார் என்றாலும், சரியல்ல, நான் சம்பாதித்த பணம் அனைத்தையும் சேமிப்பாக தான் வைத்துள்ளேன், அந்த காலகட்டத்தில் எனது தந்தையிடம் நிறை பணம் இருந்தது, அதோடு சேர்த்து நான் சேர்த்து வைத்த பணத்திலிருந்தும் மேற்படி சிகிச்சைகளுக்கு செலவு செய்து தீர்த்துவிட்டேன். எனக்கு அரசு பணி இருப்பதனால், கைநிறைய சம்பாதிக்கிறேன், நான் யார் தயவிலும் இல்லை.

7. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில், நானும், எனது மனைவியும் புதுச்சேரியில் தனிக்குடித்தனம் செய்து வந்தநிலையில், எனது மனைவி எவ்வித தகவலும் தெரிவிக்காமல் அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்று வருவதை

வாடிக்கையாக கொண்டிருந்தார் என்ற சங்கதியை எவ்வித முகாந்திரம் அற்று, என் மனைவி மீது வழக்கிற்காக பொய்யாக குற்றம் சாட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது மனைவி அவராக முன்வந்து, விவாகரத்து கோரி எவ்வித சட்ட அறிவிப்போ, வழக்கோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மனைவி பண்ருட்டி, விழுப்புரம் காவல் நிலையங்களிலும், திருவண்ணாமலை சமூக நலத்துறையிலும் என் மீது தவறாக புகார் அளித்ததோடு மட்டுமல்லாமல் எனது அலுவலகத்திற்கே 4, 5 முறைகள் வந்து என்னைப் பற்றி அவதூறு செய்திகள் பரப்பி என்னை பிரிந்து வாழும் மனநிலைக்கு எனது மனைவி தான் தள்ளினார், அதனால் தான் நான் விவாகரத்திற்காக முயன்றேன். மேற்படி காவல் நிலையங்களில் மனுதாரர் அவரது நகைகள் மற்றும் சீர்வரிசை பொருட்களை மட்டும் தான் கேட்டு, புகார் அளித்தார் என்றாலும், நான் வழக்கிற்காக என் மீது தவறாக புகார் அளித்ததோடு மட்டுமல்லாமல் எனது அலுவலகத்திற்கே 4, 5 முறைகள் வந்து என்னைப் பற்றி அவதூறு செய்திகள் பரப்பி என்னை பிரிந்து வாழும் மனநிலைக்கு எனது மனைவி தான் தள்ளினார், அதனால் தான் நான் விவாகரத்திற்காக முயன்றேன் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் விழுப்புரத்தில் முதலில் புகார் அளித்து, மேற்படி புகாரானது அதிகார எல்லை வரையறைக்கு அப்பாற்பட்டு இருப்பதனால், அதனை பண்ருட்டி காவல் நிலையத்தில் கொடுக்க சென்னதனால் தான் பண்ருட்டியில் புகார் கொடுக்க வேண்டியதாயிற்று என்றால் சரியல்ல.

8. திருவண்ணாமலையில் மனுதாரர் 1 வருடம் இருந்த காலத்தில் திருவண்ணாமலை சமூக நலத்துறையில் என் மீது புகார் அளித்தபோது, நான் திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்தவர் அல்ல என்றும், நான் பண்ருட்டியில் குடும்ப நீதிமன்றத்தின் மூலம் எங்களுக்குள் இருக்கும் பிரச்சனையை சரிசெய்து கொள்வதாக கூறியதன் அடிப்படையில், அப்புகாரானது முடித்துவைக்கப்பட்டது என்றால் சரியல்ல, மேற்படி புகாரானது பொய் புகார் என்று தெரிந்ததனால் தான், அப்புகாரானது முடித்து வைக்கப்பட்டது. நான், எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில், மனுதாரர் தன்னிச்சையாக என்னிடமிருந்து பிரிந்துபோய் விட்டார் என்றும், அதனை தொடர்ந்து நான் எடுத்த சமாதான முயற்சிகளின் காரணமாக நான் பொருளாதார கஷ்டத்திற்கு ஆளானேன் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

9. மேற்படி சமாதான முயற்சியில் மனுதாரரின் உடன்பிறவா சகோதரர்கள் ஈடுபட்டதனால், 2016 ஆம் ஆண்டு மேற்படி நபர்கள் மீது நான், எனது சொத்தை மிரட்டி எழுதி வாங்க முயற்சிக்கின்றனர் என்று பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல, ஏனெனில், மேற்படி நபர்கள் உண்மையிலேயே, எனது சொத்தை மிரட்டி எழுதி வாங்க முயற்சித்தனர், அதனால் தான் அவர்கள் மீது அவ்வாறு புகார் அளித்தேன் அது பொய் புகார் அல்ல. நான் மேற்படி சங்கதிகளை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன்

என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகள் தொடர்பாக மேற்படி நபர்களுக்கு நான் சட்ட அறிவிப்பு ஏதேனும் அளித்தேனா என்றால் அளிக்கவில்லை, ஏனெனில் அவர்கள் வாய் வார்த்தையாக பேசினார்கள், அதனால் நானும் சட்ட அறிவிப்பு எதுவும் அளிக்காமல் புகார் அளித்தேன்.

10. நான், எனது மனைவி என் மீது, தொடர்ந்து இவ்வழக்கிலிருந்தும், சவரட்சனை செய்வதிலிருந்தும், அவருக்கு பராமரிப்பு அளிப்பதிலிருந்தும், அவரை அழைத்துச் சென்று குடித்தனம் செய்வதிலிருந்தும் தப்பித்துக் கொள்வதற்காக எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள அனைத்து விவரங்களையும் பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது தாய் மாமா திருவண்ணாமலையில் இருந்தார் என்றாலும், அங்கு தான் எனது பாட்டி வீடு இருந்தது என்றாலும், அவர் எங்கள் இருவரையும் சமாதானமாக பேசி சேர்த்து வைக்கும் முயற்சியில் ஈடுபட்டார் என்றாலும், அதன் விளைவாக தான் மனுதாரர் சிறிது காலம் திருவண்ணாமலையில் வாழ்ந்து வந்தார் என்றாலும் சரியல்ல, எனது தாய் மாமா எங்கள் இருவரையும் சமாதானமாக பேசி சேர்த்து வைக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. 2010 ஆம் ஆண்டு முதல் மனுதாரர் என்னை பிரிந்து பல அவதூறுகளை எனக்கெதிராக பரப்பி வருகிறார். 2014, 2016, 2018 ஆம் ஆண்டுகளில் நான் தான் பரஸ்பரம் நாங்கள் இருவரும் பிரிந்துவிடலாம் என்று விவாகரத்திற்கு மனுதாரரை வற்புறுத்தி வந்தேன் என்றால் சரியல்ல.

11. எனது மனைவியின் சட்டப்பூர்வ கணவர் என்ற முறையில் அவருக்கு மாதமாதம் சட்டப்படியான ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என்றாலும், அவருக்கான மருத்துவ செலவுகளை செய்ய கடமைப்பட்டவர் என்றாலும், குடும்ப வன்கொடுமை சட்டம் பிரிவு 19ன் கீழ் எனது மனைவிக்கு உறைவிடமோ அல்லது மாற்று பரிகாரமோ கொடுக்க நான் சட்டப்படி கடமைப்பட்டவர் என்றாலும், குடும்ப வன்கொடுமை சட்டம் பிரிவுகள் 20 மற்றும் 22ன் கீழ் எனது மனைவிக்கு அவர் கோரியுள்ள இழப்பீடுகள் கொடுப்பதற்கு கடமைப்பட்டவர் என்றாலும் சரியல்ல. நான் சட்டப்படி நடந்து கொள்வேன்.

**நீதிமன்ற அனுமதியின் பேரில் எதிர்மனுதாரர் தரப்பில் மறுவிசாரணை**

நானும், மனுதாரரும் 2014, 2016, 2018 ஆம் ஆண்டு காலக்கட்டங்களில் ஒன்றாக வாழ்ந்து வந்தோமா என்றால், இல்லை. மனுதாரர் பண்ருட்டி, விழுப்புரம் காவல் நிலையங்களிலும், திருவண்ணாமல் சமூக நலத்துறையிலும் கொடுக்கப்பட்ட புகார்கள் என்னவானது என்றால், அந்த புகார்களை விசாரிக்கும்போது, உண்மைத்தன்மை இல்லையென்று கூறி மேற்படி புகார்களை முடித்து வைத்தனர். எதற்காக மனுதாரர் என் மீது விழுப்புரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால், எனக்கு மனஉளைச்சல் கொடுக்க வேண்டும் என்ற காரணத்திற்காக தான் அவ்வாறு மனுதாரர் என் மீது புகார் அளித்தார்.

**மறுகுறுக்கு விசாரணை**

மேற்படி மனுதாரர் பண்ருட்டி, விழுப்புரம் காவல் நிலையங்களிலும், திருவண்ணாமல் சமூக நலத்துறையிலும் கொடுக்கப்பட்ட புகார்கள் எதுவுமே பொய்யான புகார்கள் அல்ல என்றாலும், அவருக்கு சட்டப்படி கிடைக்கவேண்டிய பரிகாரங்கள் கோரி தான் மனுதாரர் புகார்களை கொடுத்தார் என்றாலும் சரியல்ல.

**(ஓம்) S.கீதா,**
**நீதித்துறை நடுவர் எண்–I**
**பண்ருட்டி.**

**/உண்மை நகல்/**

**நீதித்துறை நடுவர் எண்–I**
**பண்ருட்டி.**